தமிழ்நாடு கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக்கழக

# செய்தி மடல்

செய்தி 16 மடல் 12 டிசம்பர் – 2016 ₹1.00

## மாண்புமிகு மறைந்த தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களுக்கு மௌன அஞ்சலி



மாண்புமிகு மறைந்த தமிழ்நாடு முதலமைச்சர் **செல்வி ஜெ ஜெயலலிதா** அவர்களுக்குப் பல்கலைக்கழகப் பணியாளர்கள் 07.12.2016அன்று பல்கலைக்கழகத் தலைமை நிலைய வளாகத்தில் இரண்டு நிமிட மௌன அஞ்சலி செலுத்தினர். பல்கலைக்கழகத்தின் துணைவேந்தர் முனைவர் சு. திலகர் அவர்கள் மௌன அஞ்சலி நிகழ்ச்சியில் பங்கேற்று, மறைந்த முன்னாள் முதலமைச்சர் அவர்கள் ஏழைகளின் வாழ்வாதாரத்திற்காகவும், பல்கலைக்கழகம் மற்றும் கால்நடை மருத்துவத்தின் வளர்ச்சிக்காகவும் பல்வேறு திட்டங்களைச் செயல்படுத்தியதை நினைவுகூர்ந்தார். பல்கலைக்கழகப் பதிவாளர் முனைவர் பெரு. மதியழகன் மற்றும் பல்கலைக்கழக அதிகாரிகள் பங்கேற்றனர். பல்கலைக்கழகத்திற்குட்பட்ட கல்லூரிகள் மற்றும் மையங்களிலும் மாண்புமிகு மறைந்த தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களுக்கு 07.12.2016 அன்று மௌன அஞ்சலி செலுத்தப்பட்டது.

## தமிழ்நாடு கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக்கழகத்தின் வெள்ளி விழா நிறைவு நிகழ்ச்சி




பல்கலைக்கழகத்தின் வெள்ளி விழா நிறைவு நிகழ்ச்சி 11.11.2016அன்று சென்னைக் கால்நடை மருத்துவக் கல்லூரியில் நடைபெற்றது. பல்கலைக்கழகத்தின் துணைவேந்தர் முனைவர் சு. திலகர் அவர்கள் வரவேற்புரை ஆற்றிப் பல்கலைக்கழகத்தின் முன்னாள் துணைவேந்தர்களைச் சிறப்புச் செய்தார். துணைவேந்தர் அவர்கள் தமது வரவேற்புரையில் கால்நடை மருத்துவக் கல்வியில் தேசிய மற்றும் பன்னாட்டு அளவில் பல்கலைக்கழகத்தைப் பெருமையடையச் செய்த பல்கலைக்கழகத்தின் அனைத்துப் பணியாளர்களின் அளப்பரிய பணியினைப் பாராட்டினார். மத்திய அரசின் அறிவியல் தொழில்நுட்பத் துறையின் முன்னாள் செயலர் முனைவர் தி. ராமசாமி அவர்கள் வெள்ளி விழா நினைவு மலரை வெளியிட்டார். மேலும், தமது சிறப்புரையில் பல்கலைக்கழகத்தின் சாதனைகளைப் பாராட்டி, கால்நடை மருத்துவ அறிவியலில் பல்கலைக்கழகம் தலைமை ஏற்கவும் நாட்டின் வளர்ச்சிக்கான செயல்முறைத் திட்டத்தை தயாரிக்கவும் வேண்டும் என்றார். பல்கலைக்கழகத்தின் முன்னாள் துணைவேந்தர்கள் முனைவர் வே. ஞானப்பிரகாசம், முனைவர் ச. சண்முகசுந்தரம், முனைவர் இரா. கதிர்வேல், முனைவர் ந. பலராமன், முனைவர் ப. தங்கராசு, முனைவர் இரா. பிரபாகரன், முனைவர் பி. ரிச்சர்டு மாசிலாமணி சார்பில் அவர் மகள் திருமதி கதீ செல்வராஜ் ஆகியோர் நிகழ்ச்சியில் பங்கேற்று வாழ்த்துரை வழங்கினர். பல்கலைக்கழகத்தின் பதிவாளர் முனைவர் பெரு. மதியழகன் அவர்கள் நன்றியுரை ஆற்றினார். முன்னதாக, வெள்ளி விழா நிறைவு நிகழ்ச்சியின் ஒரு பகுதியாக “பயன்பாடுசார் பரிமாற்ற ஆராய்ச்சியில் கால்நடை மருத்துவக் கல்வி, ஆராய்ச்சி, விரிவாக்கம்” குறித்த தொழில்நுட்பக் கருத்தரங்கு, சென்னைக் கால்நடை மருத்துவக் கல்லூரியில் 11.11.2016அன்று நடைபெற்றது. துணைவேந்தர் அவர்கள் “பல்கலைக்கழகத்தின்



சாதனைகள்'' என்ற தலைப்பில் விரிவுரையாற்றித் தொழில்நுட்பக் கருத்தரங்கைத் துவக்கிவைத்தார். கல்வி, ஆராய்ச்சி, விரிவாக்கம் மற்றும் சிகிச்சையியல் பணிகளில் குறிப்பிடத்



தக்க சாதனைகளைப் பட்டியலிட்ட துணைவேந்தர் அவர்கள், கல்வி, ஆராய்ச்சி மற்றும் விரிவாக்கத்தில் குறிப்பிடத் தக்க பங்களிப்புகளைப் பல்கலைக்கழகம் வழங்கியிருக்கிறது என்று சுட்டிக்காட்டினார். மேலும், அயல்நாட்டுப் பல்கலைக் கழகங்களான மிச்சிகன் மாகாணப் பல்கலைக்கழகம், விர்ஜினிய டெக் பல்கலைக்கழகம், நப்ராஸ்கா பல்கலைக்கழகம், காண்டப்ரியா பல்கலைக்கழகம், கெண்ட் பல்கலைக்கழகம் ஆகியவற்றுடன் ஆராய்ச்சிக் கூட்டிணைவு, ஆசிரியர் மற்றும் மாணவர் பரிமாற்றத் திட்டத்திற்காகத் தமிழ்நாடு கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக்கழகம் செய்துகொண்ட புரிந்துணர்வு ஒப்பந்தம்/உடன்படிக்கைகளைக் குறிப்பிட்டார். சமுதாயச் சேவையின் ஒரு பகுதியாக, தமிழ்நாட்டின் ஊரகக் கால்நடை மருத்துவச் சேவைக்காக நடமாடும் கால்நடை மருத்துவ ஊர்தியைப் பல்கலைக்கழகம் துவக்கியிருக்கிறது என்றும், கால்நடை வளர்ப்போரின் நலன் கருதிப் பசுந்தீவனம், உயர் வகை மரபணுக்களைப் பாதுகாத்தல், தடுப்பு மருந்துகள், நோய் கண்டறிதல் முறைகள், உபகரணங்கள் ஆகியவற்றை அதிகப்படுத்துவதற்கான சிறப்புத் திட்டங்களையும் செயல்படுத்தி வருகிறது என்றும் குறிப்பிட்டார்.

இந்திய வேளாண் ஆராய்ச்சிக் கழகத்தின் முன்னாள் உதவித் தலைமை இயக்குநர் முனைவர் ஜெ.எஸ். பாட்டியா அவர்கள் ''கால்நடை மருத்துவக் கல்வி–2030'' என்ற தலைப்பில் ஆற்றிய தமது உரையில் நாட்டில் கால்நடை மருத்துவர்களின் எண்ணிக்கைக் குறைவைத் தடுப்பதற்கான உடனடி நடவடிக்கை தேவை என்று சுட்டிக்காட்டினார். இசட் நகர், இந்தியக் கால்நடை மருத்துவ ஆராய்ச்சி நிலையத்தின் விரிவாக்கக் கல்விப் பிரிவின் முதன்மை அறிவியலாளர் மற்றும் தலைவர் முனைவர் மகேஷ் சந்தர் அவர்கள் ''திறன்மிகு கற்பித்தலுக்குக் கால்நடை மருத்துவக் கல்வி ஆசிரியர்களை மேம்படுத்துதல்'' என்று தலைப்பில் ஆற்றிய தமது உரையில் பல்வேறு வகையான பண்ணையாளர்களையும் அவர்களின் பண்ணைச் செயல்பாடுகளையும் அறிந்துகொள்ளவதன் மூலம் மாணவர்களின் கற்பித்தல் திறனை மேம்படுத்த வேண்டும் என்றார். பல்கலைக்கழகத்தின் கால்நடை நலக் கல்வி மைய முன்னாள் இயக்குநர் முனைவர் வெ. புருஷோத்தமன் அவர்கள் ''கால்நடை மருத்துவம் மற்றும் விலங்கின அறிவியலில் தேவைக்கேற்ற ஆராய்ச்சி'' என்ற தலைப்பில் ஆற்றிய தமது உரையில் நிதியுதவியுடன்கூடிய துறைவாரியான மேம்பட்ட ஆராய்ச்சி மற்றும் மனித வளம் ஆகியவை வறுமையை ஒழிக்கவும், நாட்டின் பொருளாதாரத்தை மேம்படுத்துவதற்கான ஊட்டச்சத்துப் பாதுகாப்பு மற்றும் வேலைவாய்ப்பு உருவாக்கத்திற்கும் இன்றைய தேவையாக இருக்கின்றன என்றார். வெள்ளி விழா நிறைவு நிகழ்ச்சியில் பல்கலைக்கழகப் பணியாளர்கள், மாணவர்கள், முன்னாள் துணைவேந்தர்கள், பல்கலைக்கழக அதிகாரிகள் மற்றும் ஆசிரியர்கள், கால்நடைப் பராமரிப்புத் துறைசார்ந்தவர்கள், முன்னாள் மாணவர்கள் ஆகியோர் கலந்துகொண்டனர்.

## இந்திய வேளாண் ஆராய்ச்சிக் கழகத்தின் உயர்நிலைக் கண்காணிப்பு மற்றும் ஆய்வுக் குழு பார்வையிடல்

இந்திய வேளாண் ஆராய்ச்சிக் கழகத்தின் கல்விப் பிரிவுமூலம் 12ஆவது திட்டக் காலத்தில் பல்கலைக்கழகத்திற்கு வழங்கப்பட்ட நிதியுதவியை ஆய்வு செய்வதற்காக இந்திய வேளாண் ஆராய்ச்சிக் கழகம்மூலம் அமைக்கப்பட்ட



உயர்நிலைக் கண்காணிப்பு மற்றும் ஆய்வுக் குழு 14.11.2016முதல் 16.11.2016வரை பல்கலைக்கழகத்தைப் பார்வையிட்டது. பல்கலைக்கழகத்தின் துணைவேந்தர் முனைவர் சு. திலகர் அவர்கள் உயர்நிலைக் கண்காணிப்பு மற்றும் ஆய்வுக் குழுவை வரவேற்று, பல்கலைக்கழகத்தின் பல்வேறு பணிகளைக் குழுவிடம் விளக்கியுரைத்து ஆய்வைத் துவக்கிவைத்தார். பிகானேர், ராஜஸ்தான் வேளாண்மைப் பல்கலைக்கழகத்தின் முன்னாள் துணைவேந்தர் முனைவர் கே. பிரதான் அவர்களின் தலைமையில் இந்திய வேளாண் ஆராய்ச்சிக் கழகத்தின் வேளாண் புதிதறி



திட்டத்தின் முன்னாள் தேசிய இயக்குநர் முனைவர் பங்களி பாபூ, ஐதராபாத் இந்திய நெல் ஆராய்ச்சி நிலையத்தின் இயக்குநர் முனைவர் வி. ரவீந்தரபாபு, காரக்பூர் இந்தியத் தொழில்நுட்பக் கழகத்தின் பேராசிரியர் நரேந்திர சிங் ரகுவன்ஷி, ஐதராபாத் தேசிய வேளாண் கல்வி ஆராய்ச்சி மேலாண்மை நிலையத்தின் முதன்மை நிதி மற்றும் கணக்கு அலுவலர் திரு. எஸ். ஜார்ஜ், இந்திய வேளாண் ஆராய்ச்சிக் கழகத்தின் உதவித் தலைமை இயக்குநர்(மனித வள மேம்பாடு) முனைவர் எம்.ஆர். செட்டி ஆகியோரை உறுப்பினர்களாகக் கொண்ட குழுவினர் மாதவரத்தில் உள்ள பல்கலைக்கழக வளாகம், சென்னைக் கால்நடை மருத்துவக் கல்லூரி, கோடுவெளி உணவு மற்றும் பால்வளத் தொழில்நுட்பக் கல்லூரி, நாமக்கல் கால்நடை மருத்துவக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையம் ஆகியவற்றைப் பார்வையிட்டு, இந்திய வேளாண் ஆராய்ச்சிக் கழகத்தின் வளர்ச்சி நிதியைப் பயன்படுத்திப் புதிதாக ஏற்படுத்தப்பட்ட உள்கட்டமைப்பு வசதிகள், வாங்கப்பட்ட உபகரணங்கள், மாணவர் மற்றும் ஆசிரியர்க்கான வசதிகள், ஆசிரியர் மேம்பாட்டுப் பணிகள்

ஆகியவை குறித்து ஆய்வுசெய்தனர். குழுவினர் மாணவர் மற்றும் ஆசிரியர்களுடன் கலந்துரையாடினர். நடப்புத் திட்டக் காலத்தில் இந்திய வேளாண் ஆராய்ச்சிக் கழகத்தின் கல்விப் பிரிவு வளர்ச்சி நிதியாக ரூபாய் 25.99 கோடியை ஆசிரியர் மேம்பாட்டுப் பயிற்சி மையத்திற்கும், கோடைகால மற்றும் குளிர்காலப் பயிற்சிகள் நடத்துவதற்காகவும் வழங்கியுள்ளது. நாமக்கல் மற்றும் கோடுவெளி வளாகங்களில் மாணவியர் விடுதிகள், சென்னைக் கால்நடை மருத்துவக் கல்லூரியில் நவீன தேர்வுக் கூடம் உள்ளிட்ட உள்கட்டமைப்பு வசதிகள் உருவாக்கப்பட்டுள்ளன. பல்கலைக்கழகம்மூலம் இரண்டு மடிப்புப் புத்தகங்கள், ஒரு பாடப் புத்தகம், 17 கற்பித்தல் கையேடுகள், 19 பயிற்சி ஏடுகள், போட்டித் தேர்வுகளுக்கான ஒரு வழிகாட்டி ஆகியவை வெளியிடப்பட்டுள்ளன. மேலும், அனைத்துப் பல்கலைக்கழக வளாகங்களிலும் உள்ள நூலகங்களில் கூடுதலாக 4356 புத்தகங்கள், 103 மின் புத்தகங்கள், ஆறு இணைய இதழ்கள் மற்றும் ஐந்து மென்பொருள்கள் ஆகியவை வாங்கப்பட்டுள்ளன. குறிப்பிடத்தக்க மற்றுமொரு சாதனையாக அனைத்து வளாகங்களிலும் மாணவர்க்கான சுகாதார வசதிகள் ஏற்படுத்தப்பட்டுள்ளன. மொத்தம் 165 பேராசிரியர்கள் கருத்தரங்குகள் மற்றும் பயிற்சிகளில் பங்கேற்றுள்ளனர். இந்திய வேளாண் ஆராய்ச்சிக் கழகத்தின் குழுவினர் எந்த நோக்கத்திற்காக நிதியுதவி அளிக்கப்பட்டதோ அந்நோக்கத்திற்கு நிதியைச் சரியாகப் பயன்படுத்தியிருப்பதைப் பாராட்டினர். மேலும், அடுத்த திட்டக் காலத்திற்கு இந்திய வேளாண் ஆராய்ச்சிக் கழகத்தின் நிதியுதவி தேவைப்படும் உள்கட்டமைப்பு வசதிகளாகக் கற்பித்தல் கால்நடைப் பண்ணை வளாகம், பயிற்சிக்கான கால்நடைச் சிகிச்சை வளாகம், நடமாடும் கால்நடைச் சிகிச்சை மற்றும் நோய் கண்டறியும் ஆய்வகங்கள் ஆகியவற்றை அடையாளங்கண்டனர்.

## “புருசெல்லா கருச்சிதைவு நோய் கண்டறிதல் உபகரணப்பெட்டி” வெளியீடு




பல்கலைக்கழகத்தின் கால்நடை மருத்துவ ஆய்வின் பயன்பாடுசார் பரிமாற்றத் தளம் மூலம் “புருசெல்லா கருச்சிதைவு நோய் கண்டறிதல் உபகரணப்பெட்டி” மனித மற்றும் விலங்குகளில் கன்றுவீச்சு நோயைக் கண்டறிவதற்காக உருவாக்கப்பட்டுள்ளது. 17.11.2016 அன்று புதுதில்லியில் நடைபெற்ற கன்றுவீச்சு நோய்–2016 பன்னாட்டு ஆய்வுக் கருத்தரங்கின் துவக்க விழாவில் மத்திய அரசின் மாண்புமிகு அறிவியல் தொழில்நுட்பம் மற்றும் புவி அறிவியல் துறையின் இணை அமைச்சர் திரு. ஒய்.எஸ். சௌத்ரி மற்றும் மாண்புமிகு வேளாண்மை மற்றும் உழவர் நலத் துறையின் இணை அமைச்சர் திரு. சுதர்சன் பாகத் ஆகியோர் “புருசெல்லா கருச்சிதைவு நோய் கண்டறிதல் உபகரணப்பெட்டியை” வெளியிட்டனர். மேலும், பல்கலைக்கழகத்தின் துணைவேந்தர் முனைவர் சு. திலகர் அவர்களை இணை ஆசிரியராகக் கொண்ட “கால்நடை உயிர்த்தொழில்நுட்பம் – தடுப்பு மருந்துகள் மற்றும் நோய் கண்டறிதல் முறைகள் – சந்தை மற்றும் முதலீடு வாய்ப்புகள்” என்ற புத்தகமும் வெளியிடப்பட்டது. மாண்புமிகு நாடாளுமன்ற உறுப்பினர் திரு. கே. நாராயண ராவ், மத்திய அரசின் உயிர்த் தொழில்நுட்பத்துறைச் செயலர் டாக்டர் கே. விஜய்ராகவன், இந்திய வேளாண் ஆராய்ச்சிக் கழகத்தின் துணைத் தலைமை இயக்குநர் (கால்நடை அறிவியல்) டாக்டர் ஹெச். ரஹ்மான், அமெரிக்காவின் விர்ஜினிய டெக்கின் டாக்டர் என். ஸ்ரீரங்கநாதன், உயிர்த் தொழில்நுட்பத் துறையின் ஆலோசகர் டாக்டர் எஸ். ஆர். ராவ் ஆகியோர் நிகழ்ச்சியில் பங்கேற்றனர். உபகரணப் பெட்டியானது ஸ்பெயினின் மேட்ரிட், இங்கேனசா தனியார் நிறுவனத்துடன் இணைந்து புருசெல்லா நுண்ணுயிரிக்கு எதிராக ஓரின நோய் நுண்ம எதிரியைப் பயன்படுத்தி உருவாக்கப்பட்டது. இந்த உபகரணப் பெட்டியின் பயன்பாடு இந்திய நாட்டின மாடுகளில் கண்டறியப்பட்டு உறுதி செய்யப்பட்டது. இப் பரிசோதனை ரோஸ் பெங்கால் அணுத்திரள் சோதனையுடன் ஒப்பிடுகையில் 90 விழுக்காடு நுண்ணிய மாற்றங்களை அளவிடக்கூடியது மற்றும் சிறப்புத்தன்மை வாய்ந்தது. புருசெல்லா கருச்சிதைவு நோய் கண்டறிதல் உபகரணப்பெட்டியை மனிதர்களில் கன்றுவீச்சு நோயைக் கண்டறிவதற்கும் பயன்படுத்த முடியும்.

## மாண்புமிகு கால்நடைப் பராமரிப்புத் துறை அமைச்சர் பார்வையிடல்



தமிழக அரசின் மாண்புமிகு கால்நடைப் பராமரிப்புத் துறை அமைச்சர் திரு. பா. பாலகிருஷ்ணா ரெட்டி அவர்கள் 25.11.2016 அன்று வேலூர் மாவட்டம், நெமிலி ஒன்றியம், கீழ்வீதி கிராமத்தில் இயங்கிவரும் மேய்க்கால் புறம்போக்கு நிலங்களில் பசுந்தீவன உற்பத்தித் திட்டப் பணிகளை மேற்பார்வையிட்டுத் திட்டத்தின் மூலம் உற்பத்தி செய்யப்பட்ட பசுந்தீவனங்களைப் பயனாளிகளுக்கு வழங்கினார். நிகழ்ச்சியில் கால்நடைப் பராமரிப்பு மற்றும் மருத்துவப் பணிகள் இயக்குநர் திரு. த. ஆப்ரகாம் இ.ஆ.ப., அவர்கள் திட்டத்தின் பல்வேறு பணிகளை விளக்கியுரைத்தார். வேலூர் மாவட்ட ஆட்சியர் திரு. எஸ்.ஏ. ராமன் இ.ஆ.ப., கால்நடைப் பராமரிப்புத் துறையின் வேலூர் மண்டல இணை இயக்குநர் மருத்துவர் ஏ. அர்த்தனாரி, கால்நடைப் பராமரிப்புத் துறை வல்லுநர் மருத்துவர் டி. மனோகரன் மற்றும் ஊரக வளர்ச்சித் துறை அலுவலர்கள் நிகழ்ச்சியில் பங்கேற்றனர்.

## இமேஜிங் மற்றும் எண்டோஸ்கோபி பயிற்சி

பல்கலைக்கழகத்திற்கும் இந்திய ராணுவத்திற்கும் இடையேயான புரிந்துணர்வு ஒப்பந்தத்தின் ஒரு பகுதியாகப் பல்கலைக்கழகத்தின் சிகிச்சையியல் இயக்குநரகம்மூலம் “செல்ல மற்றும் பண்ணை விலங்குகள் மருத்துவத்தில் இமேஜிங் மற்றும் எண்டோஸ்கோபி பயன்பாடு முறைகள்” குறித்த 21 நாள் பயிற்சி, 07.11.2016 முதல் 27.11.2016 வரை நடத்தப்பட்டது. பயிற்சியில் இந்திய ராணுவப் படையின் கால்நடை மருத்துவச் சேவையின் நான்கு அலுவலர்கள் பங்கேற்றனர். பயிற்சியின் நிறைவு விழாவில் பல்கலைக்கழகத்தின் துணைவேந்தர் முனைவர் சு. திலகர் அவர்கள் பங்கேற்று, நிறைவுரை ஆற்றிப்

பங்கேற்பாளர்களுக்குச் சான்றிதழ் வழங்கினார். சென்னைக் கால்நடை மருத்துவக் கல்லூரி முதல்வர் முனைவர் சி.



பாலச்சந்திரன், சிகிச்சையியல் இயக்குநர் முனைவர் இரா. ஜெயபிரகாஷ் ஆகியோர் வாழ்த்துரை வழங்கினர். கால்நடை மருத்துவச் சிகிச்சைத் துறைப் பேராசிரியர் மற்றும் தலைவர் முனைவர் சே. பிரதாபன் அவர்கள் நன்றியுரை ஆற்றினார்.

### மரபணுக்களைப் பேணுதல் மற்றும் மேம்படுத்துதல் பயிற்சி



நாமக்கல் கால்நடை மருத்துவக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையத்தின் கோழியின உயர்கல்வி மையத்தில் "உணவுப் பாதுகாப்பிற்காக நாட்டுக் கோழியினங்களில் மரபணுக்களைப் பேணுதல் மற்றும் மேம்படுத்துதல்" என்ற 21 நாள் தேசிய அளவிலான பயிற்சி, 09.11..2016 முதல் 29.11.2016 வரை நடைபெற்றது. பயிற்சியைத் தொலைநிலைக் கல்வி இயக்குநர் முனைவர் ச.அ. அசோகன் அவர்கள் துவக்கிவைத்தார். விரிவுரைகளும், கல்விப் பயணங்களும் ஏற்பாடு செய்யப்பட்டன. 29.11.2016 அன்று நடைபெற்ற பயிற்சியின் நிறைவு விழாவில் கல்லூரி முதல்வர் முனைவர் இல. குணசீலன் அவர்கள் சிறப்பு விருந்தினராகப் பங்கேற்று, நிறைவுரை ஆற்றிப் பங்கேற்பாளர்களுக்குச் சான்றிதழ் வழங்கினார். பல்வேறு மாநிலங்களிலுள்ள வேளாண் பல்கலைக்கழகங்களிலிருந்து உதவிப் பேராசிரியர்கள் பயிற்சியில் பங்கேற்றனர்.

### அல்ட்ராசோனோகிராபி பயிற்சி

பல்கலைக்கழகத்தின் சிகிச்சையியல் இயக்குநரகம் மூலம் ஏபிஸ் எக்ஸ்போர்ட்ஸ் இந்திய நிறுவனத்தின் நிதியுதவியில் "கால்நடை மருத்துவர்களுக்கு அல்ட்ராசோனோகிராபி" குறித்த மூன்று நாள் பயிற்சி, சென்னைக் கால்நடை மருத்துவக் கல்லூரியின் கால்நடை மருத்துவச் சிகிச்சைத் துறையில் 28.11.2016 முதல் 30.11.2016 வரை நடத்தப்பட்டது. பயிற்சியில் ஆந்திர பிரதேசம், கர்நாடகம், கேரளம், தமிழ்நாடு மற்றும் தெலுங்கானா மாநிலங்களைச் சார்ந்த 9 கால்நடை மருத்துவர்கள் பங்கேற்றனர். 30.11.2016 அன்று நடைபெற்ற பயிற்சியின் நிறைவு விழாவில் சிகிச்சையியல் இயக்குநர் முனைவர் இரா. ஜெயபிரகாஷ் அவர்கள் பங்கேற்று, பங்கேற்பாளர்களுக்குச் சான்றிதழ் வழங்கினார். ஏபிஸ் எக்ஸ்போர்ட்ஸ் இந்திய நிறுவனத்தின் மண்டல மேலாளர் திரு. பிரேம் குமார் அவர்கள் வாழ்த்துரை வழங்கினர். கால்நடை மருத்துவச் சிகிச்சைத் துறைப் பேராசிரியர் மற்றும் தலைவர் முனைவர் சே. பிரதாபன் அவர்கள் பயிற்சியை ஒருங்கிணைத்தார்.

### களப்பணிக் கால்நடை மருத்துவர்களுக்குப் பயிற்சி

- நாமக்கல், கால்நடை மருத்துவக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையத்தின் கால்நடைச் சிகிச்சைத் துறைமூலம் கால்நடை மருத்துவத் தொடர் கல்வித் திட்டத்தின்கீழ் "பெரிய பிராணிகளுக்கான நவீனச் சிகிச்சை" குறித்த பயிற்சி, கல்லூரியின் கால்நடைச் சிகிச்சை கற்பிக்கும் வளாகத்தில் 14.11.2016 முதல் 19.11.2016 வரை நடத்தப்பட்டது. கேரள மாநிலக் கால்நடை மருத்துவக் கழகத்தைச் சார்ந்த 10 களப்பணிக் கால்நடை மருத்துவர்கள் பயிற்சியில் பங்கேற்றனர். அவர்களுக்குப் பயிற்சி நிறைவு விழாவில் கல்லூரி முதல்வர் முனைவர் இல. குணசீலன் அவர்கள் சான்றிதழ் வழங்கினார்.
- நாமக்கல், கால்நடை மருத்துவக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையத்தின் கால்நடைப் பராமரிப்பு விரிவாக்கக் கல்வித் துறைமூலம் மாநில வேளாண் மேலாண்மை மற்றும் விரிவாக்கப் பயிற்சி நிறுவன நிதியுதவியில் "விரிவாக்கப் பணியாளர்களுக்கு இனப்பெருக்கம், தீவனம் அளித்தல் மற்றும் சுகாதார மேலாண்மை" குறித்த பயிற்சி 09.11.2016 முதல் 11.11.2016 வரை நடத்தப்பட்டது. பயிற்சியில் திருச்சி, தஞ்சாவூர், தர்மபுரி, கிருஷ்ணகிரி, வேலூர் மற்றும் விழுப்புரம் மாவட்டங்களைச் சார்ந்த 30 கால்நடை உதவி மருத்துவர்கள் கலந்து கொண்டனர்.
- கரூர், கால்நடை மருத்துவப் பல்கலைக்கழகப் பயிற்சி மற்றும் ஆராய்ச்சி மையம்மூலம் கரூர் மாவட்டத்தின் கால்நடைப் பராமரிப்புத் துறையைச் சார்ந்த 32 கால்நடை உதவி மருத்துவர்கள் மற்றும் உதவி இயக்குநர்களுக்குச் "சமச்சீர் தீவனம் தயாரித்தல்" என்ற தொழில்நுட்பக் கருத்தரங்கு 30.11.2016 அன்று நடத்தப்பட்டது.

### சிகிச்சையியல் உள்ளிருப்புப் பயிற்சி

வங்காளதேச நாட்டின் மைமன்சிங், வங்காளதேச வேளாண் பல்கலைக்கழகத்தின் 104 மாணவர்களுக்குச் சிகிச்சையியல் உள்ளிருப்புப் பயிற்சி, நாமக்கல் கால்நடை மருத்துவக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையத்தில் இரண்டு தொகுதியாக 11.11.2016 – 20.11.2016 மற்றும் 21.11.2016 –30.11.2016 ஆம் தேதிகளில் நடத்தப்பட்டது. பயிற்சியின் நிறைவு விழாவில் கல்லூரி முதல்வர் முனைவர் இல. குணசீலன் அவர்கள் தலைமை வகித்து, மாணவர்களுக்குச் சான்றிதழ் வழங்கினார். பயிற்சிக்கான ஏற்பாடுகளைக் கல்லூரியின் சிகிச்சைத் துறையின் ஆசிரியர்கள் செய்தனர்.

### தொழில்முனைவோர் மேம்பாட்டுப் பயிற்சி

கோயம்புத்தூர், கால்நடை மருத்துவப் பல்கலைக்கழகப் பயிற்சி மற்றும் ஆராய்ச்சி மையம், குஜராத்திலுள்ள இந்திய அரசின் தொழில்முனைவோர் மேம்பாட்டு நிலையத்தின் நிதியுதவியுடன் "சுகாதாரமான கோழியிறைச்சி மற்றும் இறைச்சிப் பொருட்கள் தயாரிப்பு" என்ற தொழில்நுட்பம் சார்ந்த தொழில்முனைவோர் மேம்பாட்டுப் பயிற்சியினை 27.09.2016 முதல் 11.11.2016 வரை நடத்தியது. பயிற்சியினைத் பல்கலைக்கழகத்தின் விரிவாக்கக் கல்வி இயக்குநர் முனைவர் நி.கு. சுதீப்குமார் அவர்கள் துவக்கிவைத்தார். பயிற்சியில் சுகாதாரமான கோழியிறைச்சி உற்பத்தி மற்றும் இறைச்சிப் பொருட்கள் தயாரிப்பு தொடர்பான விரிவுரைகள், செயல்

விளக்கங்கள் மற்றும் செய்முறைப் பயிற்சிகள் அளிக்கப்பட்டன. மேலும், கோழியிறைச்சி உற்பத்தி நிறுவனங்கள் மற்றும் சிறிய



கோழியிறைச்சி விற்பனை அங்காடிகளுக்குப் பயிற்சியாளர்கள் அழைத்துச் செல்லப்பட்டனர். 11.11.2016அன்று நடைபெற்ற பயிற்சியின் நிறைவு விழாவில் கோயம்புத்தூர், கால்நடைப் பராமரிப்புத் துறையின் மண்டல இணை இயக்குநர் மருத்துவர் த. தமிழ்ச்செல்வன் அவர்கள் கலந்து கொண்டு பயிற்சி பெற்றவர்களுக்குச் சான்றிதழ் வழங்கினார். அறிவியல், பொறியியல் மற்றும் தொழில்நுட்பம் சார்ந்த பட்டம் மற்றும் பட்டயம் பெற்ற 25 பேர் பயிற்சியில் பங்கேற்றனர்.

## கால்நடை நலம் பேணுநர் குறித்த செயல்திறன் பயிற்சி



தமிழ்நாடு திறன் மேம்பாட்டுக் கழகத்தின் நிதியுதவியிலான "கால்நடை மற்றும் கோழி வளர்ப்பில் செயல்திறன் மேம்பாட்டுத் தொழில் பயிற்சி" என்ற திட்டத்தின்கீழ் "விலங்கு நலம் பேணுநர்" பயிற்சியின் மூன்றாவது தொகுதி மதுரை, கால்நடை மருத்துவப் பயிற்சி மற்றும் நோய் ஆய்வு மையத்தில் 21.11.2016அன்று துவங்கியது. பல்கலைக்கழகத்தின் துணைவேந்தர் முனைவர் சு. திலகர் அவர்கள் பயிற்சியைத் துவக்கிவைத்துத் தலைமையுரை நிகழ்த்தினார். மேலும், பண்ணையாளர்கள் தங்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்திக்கொள்ள இத்தகைய செயல்திறன் பயிற்சிகளைப் பயன்படுத்திக்கொள்ள வேண்டும் என்றார். நிகழ்ச்சியில் பல்கலைக்கழகத்தின் தொலைநிலைக் கல்வி இயக்குநர் முனைவர் ச.அ. அசோகன், கால்நடை நலக் கல்வி மைய இயக்குநர் முனைவர் பி.ஜ. கணேசன், கால்நடைப் பராமரிப்புத் துறையின் மதுரை மண்டல இணை இயக்குநர் டாக்டர் எம். பாலசந்திரன், மதுரை ஆவின் மேலாளர் டாக்டர் என். பாலகுரு ஆகியோர் வாழ்த்துரை வழங்கினர். முன்னதாக, சென்னைக் கால்நடை மருத்துவக் கல்லூரியின் கால்நடைச் சிகிச்சைத் துறைப் பேராசிரியர் மற்றும் தலைவர் முனைவர் செசிலியா ஜோசப் அவர்கள் வரவேற்புரை ஆற்றினார். நிகழ்ச்சி முடிவில் மதுரை, கால்நடை மருத்துவப் பயிற்சி மற்றும் நோய் ஆய்வு மையப் பேராசிரியர் மற்றும் தலைவர் முனைவர் வி. பழனிசாமி அவர்கள் நன்றியுரை ஆற்றினார். மொத்தம் 30 பேர் பயிற்சியில் பங்கேற்கப் பதிவுசெய்தனர்.

"விலங்கு நலம் பேணுநர்" பயிற்சியின் நான்காவது தொகுதி, 20 பங்கேற்பாளர்களுக்காகச் சென்னைக் கால்நடை மருத்துவக் கல்லூரியின் சிகிச்சைத் துறையில் 23.11.2016அன்று துவக்கப்பட்டது. நிகழ்ச்சியில் தொலைநிலைக் கல்வி இயக்குநர் முனைவர் ச.அ. அசோகன், சிகிச்சையியல் இயக்குநர் முனைவர் இரா. ஜெயபிரகாஷ், முன்னாள் சிகிச்சையியல் இயக்குநர் முனைவர் சொ.ரா. சீனிவாசன், ஸ்ரீநிவாஸ அறக்கட்டளையின் திட்ட மேலாளர் திரு. பொன்வைத்தியநாதன் ஆகியோர் பங்கேற்றுப் பங்கேற்பாளர்களுடன் கலந்துரையாடினர்.

## கால்நடை மருத்துவ முகாம்

கரூர், கால்நடை மருத்துவப் பல்கலைக்கழகப் பயிற்சி மற்றும் ஆராய்ச்சி மையமும், கரூர் மாவட்டக் கால்நடைப் பராமரிப்புத் துறையும் இணைந்து தத்தெடுக்கப்பட்ட கிராமமான ஜல்லிப்பட்டியில் 28.11.2016அன்று "சிறப்புக் கால்நடை மருத்துவ முகாமை" நடத்தின. பண்ணையாளர்களுக்குத் தனுவாஸ் தாது உப்புக்கலவை வழங்கப்பட்டது. மொத்தம் 730 கால்நடை மற்றும் கோழிகளுக்குச் சிகிச்சையளிக்கப்பட்டது.

## கிராமப்புறக் கோழியின நோய்த்தடுப்பு முகாம்



ஓசூர், கோழியின உற்பத்தி மற்றும் மேலாண்மைக் கல்லூரியும் கால்நடை பராமரிப்புத் துறையும் இணைந்து நபார்டு வங்கி நிதியுதவிமூலம் கிருஷ்ணகிரி மாவட்டம், சொல்லேபுரம் கிராமத்தில் 02.11.2016அன்று கோழிகளுக்கான இலவச நோய்த்தடுப்பு முகாமை நடத்தின. முகாமில், மொத்தம் 740 நாட்டுக்கோழி மற்றும் மேம்படுத்தப்பட்ட கோழி இனங்களுக்குத் தடுப்பூசி அளிக்கப்பட்டது. மேலும், மழை மற்றும் குளிர் காலங்களில் கோழிகளுக்கான நோய்த்தடுப்பு மேலாண்மை" என்ற தலைப்பில் விரிவுரைக்கு ஏற்பாடு செய்யப்பட்டது. இதன் மூலம் 150 கோழி வளர்ப்போர் மற்றும் விவசாயிகள் பயனடைந்தனர்.

## தேசியப் பால்வள நாள்



வெண்மைப் புரட்சியின் தந்தை டாக்டர் வர்கீஸ் குரியன் அவர்களின் பிறந்த நாளை நினைவுகூரும் வகையில் ஒரத்தநாடு, கால்நடை மருத்துவக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையத்தின் கால்நடை உற்பத்திப் பொருட்கள் தொழில்நுட்பத் துறை (பால்வள அறிவியல்), சென்னைக் கால்நடை மருத்துவக் கல்லூரியின் கால்நடை உற்பத்திப் பொருட்கள் தொழில்நுட்பத் துறை(பால்வள அறிவியல்) ஆகியவற்றால் பல்வேறு போட்டிகள் நடத்தப்பட்டுத் தேசியப் பால்வள நாள் 28.11.2016 முதல் 30.11.2016 வரை

கடைப்பிடிக்கப்பட்டது. ஒரத்தநாடு, கால்நடை மருத்துவக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையத்தின் முதல்வர் முனைவர் க.ந. செல்வக்குமார் மற்றும் சென்னைக் கால்நடை மருத்துவக் கல்லூரி முதல்வர் முனைவர் சி. பாலச்சந்திரன் ஆகியோர் தத்தம் கல்லூரியில் வெற்றிபெற்ற மாணவர்களுக்குப் பரிசுகள் மற்றும் சான்றிதழ்கள் வழங்கினர்.

### நூலக வார விழா



"நூலக வார விழா 2016", நாமக்கல் கால்நடை மருத்துவக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையத்தால் 14.11.2016 முதல் 18.11.2016 வரை கொண்டாடப்பட்டது. மொழித்திறன் சோதித்தல், கலந்துரையாடல், புத்தக மதிப்புரை, அச்சுப்படி சேகரிப்பு என நடத்தப்பட்ட பல்வேறு போட்டிகளில் ஆராய்ச்சி மாணவர்கள் உட்பட 151 மாணவர்கள் பங்கேற்றனர். மேலும், 16.11.2016 முதல் 18.11.2016 வரை நடத்தப்பட்ட புத்தகக் கண்காட்சியில் பல்கலைக்கழகத்தால் அனுமதிக்கப்பட்ட 10 புத்தக விற்பனையாளர்கள் பங்கேற்றுத் தமது வெளியீடுகளை காட்சிக்கு வைத்தனர்.

### மாற்றுத்திறனாளிக்குத் தொழில்நுட்ப உதவி



திருச்சிராப்பள்ளி, கால்நடை மருத்துவப் பல்கலைக்கழகப் பயிற்சி மற்றும் ஆராய்ச்சி மையம் அளித்த தொழில்நுட்ப உதவி மற்றும் இடுபொருட்களால் மாற்றுத் திறனாளியான திரு. அசோக் கண்ணன் அவர்கள் சுமார் 6,000 எண்ணிக்கை கொண்ட நாட்டுக்கோழிப் பண்ணையை நிறுவிப் பராமரித்து வருகிறார். முள்ளிப்பட்டியில் உள்ள இப்பண்ணையைத் திருச்சிராப்பள்ளி மாவட்ட ஆட்சியர் மருத்துவர் கே.எஸ். பழனிச்சாமி இ.ஆ.ப. அவர்கள் வருவாய் அலுவலர்களுடன் 11.11.2016அன்று பார்வையிட்டுத் திரு. அசோக் கண்ணன் அவர்களுடன் கலந்துரையாடினார் மற்றும் பயிற்சி மற்றும் ஆராய்ச்சி மையப் பேராசிரியர்களைப் பாராட்டினார்.

### பயனாளிகளுடன் சந்திப்புக் கூட்டம்

மேச்சேரி செம்மறியாடு – மெகா செம்மறியாடு இனப்பெருக்கத் திட்டப் பயனாளிகளுடன் சந்திப்புக் கூட்டம் 26.11.2016அன்று சேலம் மாவட்டம், தார்க்காடு கிராமத்தில் நடைபெற்றது. நிகழ்ச்சியில் பல்கலைக்கழகத்தின் கால்நடை உற்பத்திக் கல்வி மைய இயக்குநர் முனைவர் வே. ரமேஷ் சரவணகுமார் அவர்கள் கலந்துகொண்டு பயனாளிகளோடு கலந்துரையாடி, குடற்புழு நீக்க மருந்துகளைப் பயனாளிகளுக்கு வழங்கினர்.

### விருதுகள்

- நாமக்கல், கால்நடை மருத்துவக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையத்தின் கால்நடை நோய்க்குறியியல் துறைப் பேராசிரியர் மற்றும் தலைவர் முனைவர் கு.அ. பாலசுப்ரமணியம் அவர்களுக்கு 09.11.2016 முதல் 11.11.2016 வரை நடைபெற்ற இந்தியக் கால்நடை மருத்துவ நோய்க்குறியியல் வல்லுநர்களின் 33ஆவது மாநாட்டில் "இந்தியக் கால்நடை மருத்துவ நோய்க்குறியியலாளர் சங்கத்தின் சிறந்த ஆய்வாளர்" விருது வழங்கப்பட்டது. மேலும், அவரின் சிறந்த பணிக்காக "சிறந்த செயல் பணியாளர் விருதும்" அவருக்கு வழங்கப்பட்டது.
- இந்தியக் கால்நடை மருத்துவ நோய்க்குறியியல் வல்லுநர்களின் 33ஆவது மாநாட்டில் சென்னைக் கால்நடை மருத்துவக் கல்லூரியின் ஒருங்கிணைந்த சிகிச்சை ஆய்வுக்கூடத்தின் பேராசிரியர் மற்றும் தலைவர் முனைவர் எஸ். வைரமுத்து அவர்களுக்குச் சிறந்த உடன்விலங்கு நோய்க்குறியியலாளர்–2016க்கான சாதனை விருது வழங்கப்பட்டது.
- இந்தியக் கால்நடை மருத்துவ நோய்க்குறியியல் வல்லுநர்களின் 33ஆவது மாநாட்டில் மருத்துவர் முகலே மாதவ் நிலகந்த் அவர்களுக்குச் சிறந்த வாய்மொழி ஆராய்ச்சிக் கட்டுரை சமர்ப்பித்தலுக்கான இரண்டாவது பரிசாக எஸ்கேஎம் அனிமல் பீட்ஸ் மற்றும் புட்ஸ் இந்திய நிறுவனத்தின் இளம் விஞ்ஞானி விருதும்–2016, 2015–16 ஆண்டிற்கான சிறந்த முனைவர் பட்ட ஆய்வேட்டிற்கான டாக்டர் பத்ரி ராம ராவ் விருதும் வழங்கப்பட்டன.
- திருப்பதி, கால்நடை மருத்துவக் கல்லூரியில் நடைபெற்ற 9ஆவது கால்நடை ஊட்டச்சத்தியல் சங்க மாநாட்டில் வாசிக்கப்பட்ட "வனராஜா கோழிகளின் கொட்டில் முறையில் அசோலாத் தீவனத்தின் வளர்ச்சித் திறனை ஆராய்தல்" என்ற கட்டுரைக்குச் சிறந்த ஆராய்ச்சிக் கட்டுரைக்கான இரண்டாவது பரிசு கரூர், கால்நடை மருத்துவப் பல்கலைக்கழகப் பயிற்சி மற்றும் ஆராய்ச்சி மையத்தின் முனைவர் பெ. வசந்தகுமார், மருத்துவர் என். பாரதி மற்றும் மருத்துவர் ஜி. விஜயகுமார் ஆகியோர்க்கு வழங்கப்பட்டது.
- சென்னைக் கால்நடை மருத்துவக் கல்லூரியின் பி.வி.எஸ்சி. மற்றும் ஏ.எச். பட்ட முதலாமாண்டு மாணவர் வி. கிஷோர் குமார், தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டுக் கழகத்தின் வேலூர் பிரிவு நடத்திய 2016–17ஆம் ஆண்டுக்கான மாவட்ட அளவிலான முதலமைச்சர் கோப்பைக்கான போட்டியில் TaeKwonDoஇல் முதலிடமும், பண முடிப்பு ரூபாய் 10,000/– பெற்றார். பல்கலைக்கழகத்தின் துணைவேந்தர் முனைவர்



சு. திலகர் அவர்கள் 20.11.2016அன்று மாணவர் வி. கிஷோர் குமாரைப் பாராட்டினார். இந்நிகழ்வில் கல்லூரி முதல்வர்

முனைவர் சி. பாலச்சந்திரன், அடிப்படை அறிவியல் புல முதல்வர் முனைவர் கா. குமணன், சிகிச்சையியல் இயக்குநர் முனைவர் இரா. ஜெயபிரகாஷ், தொலைநிலைக் கல்வி இயக்குநர் முனைவர் ச.அ. அசோகன் ஆகியோர் உடனிருந்தனர்.

- தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டுக் கழகத்தின் நாமக்கல் பிரிவு நடத்திய முதலமைச்சர் நீச்சல் கோப்பைக்கான போட்டியில் நாமக்கல், கால்நடை மருத்துவக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையத்தின் பி.வி.எஸ்சி. மற்றும் ஏ.எச். பட்ட இரண்டாம் ஆண்டு மாணவர் பி. சந்தோஷ் குமார், 200 மீட்டர் பட்டர்பிளை நீச்சல் போட்டியில் முதல் இடத்தைப் பெற்றார்.

### உடற்செயலியல் வினாடி–வினாப் போட்டி

இந்தியக் கால்நடை உடற்செயலியல் வல்லுநர்கள் சங்கம் சார்பில் கல்லூரி அளவிலான உடற்செயலியல் வினாடி–வினாப் போட்டி, 17.11.2016அன்று ஒரத்தநாடு, கால்நடை மருத்துவக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையத்தில் நடைபெற்றது. கல்லூரி முதல்வர் முனைவர் க.ந. செல்வக்குமார் அவர்கள் போட்டியைத் துவக்கி வைத்தார். மாணவர்கள் ர. அப்பாஸ் மற்றும் கே. தனுஷ் ஆதித்யா அடங்கிய மூன்றாம் ஆண்டு மாணவர் அணி, கல்லூரி அளவில் வெற்றிபெற்றது. மேலும், 25.11.2016அன்று ஆந்திர மாநிலம், கன்னாவரம் கால்நடை மருத்துவக் கல்லூரியில் நடைபெற்ற மண்டல அளவிலான போட்டியில் மூன்றாம் இடம் பிடித்தது.

### நாட்டுநலப் பணித் திட்டம் மற்றும் தேசிய மாணவர் படைப் பணிகள்

- நாமக்கல், கால்நடை மருத்துவக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையத்தின் தேசிய மாணவர் படை மற்றும் நாட்டுநலப் பணித் திட்டப் பிரிவுகளும் நாமக்கல், அரசுத் தலைமை மருத்துவமனையின் அலுவலர்களும் இணைந்து “இரத்ததான முகாமை” கல்லூரி வளாகத்தில் 23.11.2016அன்று நடத்தினர். கல்லூரி முதல்வர் முனைவர் இல. குணசீலன் அவர்கள் முகாமினைத் துவக்கிவைத்து, இரத்ததானம் செய்தோர்க்குப் பாராட்டுச் சான்றிதழ்களை வழங்கினார். முகாமில், தேசிய மாணவர் படை மற்றும் நாட்டுநலப் பணித் திட்டம், இளநிலை மற்றும் முதுநிலைப் பட்ட மாணவர்கள், பணியாளர்கள் என 55 பேர் இரத்த தானம் செய்தனர். நாமக்கல் அரசுத் தலைமை மருத்துவமனை,



இரத்த வங்கி மருத்துவ அதிகாரி மருத்துவர் அ. அன்புமலர் அவர்கள் இரத்ததானம் செய்தவர்களைப் பாராட்டி, தமிழ்நாடு இரத்ததான ஆலோசனைச் சங்கச் சான்றிதழை வழங்கினார்.

- சென்னைக் கால்நடை மருத்துவக் கல்லூரியின் நாட்டுநலப் பணித் திட்டப் பிரிவுமூலம் “மலட்டுத்தன்மை நீக்கச் சிகிச்சை மற்றும் மரக்கன்று நடும் முகாம்” தத்தெடுக்கப்பட்ட கிராமங்களான சிவன்வயல், பந்திகாவனூர் மற்றும் கரையன்மேட்டில் 26.11.2016அன்று நடத்தப்பட்டது. கல்லூரி முதல்வர் முனைவர் சி. பாலச்சந்திரன் அவர்கள் முகாமைத் துவக்கிவைத்தார். முகாமில் அடிப்படை அறிவியல் புல முதல்வர் முனைவர் கா. குமணன், விரிவாக்கக் கல்வி இயக்குநர் முனைவர் நி.கு. சுதீப் குமார், உழவியல் துறைப் பேராசிரியர் மற்றும் தலைவர் முனைவர் வ.மீ. சங்கரன் ஆகியோர் பங்கேற்றனர். மொத்தம் 50 கறவை மாடுகளுக்குச் சிகிச்சையளிக்கப்பட்டு, தனுவாஸ் ஸ்மார்ட் தாதுப்புக் கலவை மற்றும் தனுவாஸ் தாதுப்புக் கட்டி வழங்கப்பட்டது. மேலும், தத்தெடுக்கப்பட்ட கிராமங்களில் 100 மரக்கன்றுகளை ஆசிரியர்கள் மற்றும் மாணவர்கள் நட்டனர். இந்நிகழ்வில் 60 மாணவர்கள் பங்கேற்றனர். வேப்பேரி, குருஸ்ரீ சாந்திவிஜய் ஜெயின் குருகல் கல்லூரியுடன் இணைந்து கால்நடை மருத்துவ முகாம், நத்தம்–நல்லூர் மற்றும் மணமை கிராமங்களில் 27.11.2016அன்று நடத்தப்பட்டது. முகாமில் மொத்தம் 150




கால்நடைகளுக்குச் சிகிச்சை அளிக்கப்பட்டது. முகாமில் 15 நாட்டுநலப் பணித் திட்டத் தன்னார்வலர்கள் பங்கேற்றனர்.

- ஒரத்தநாடு, கால்நடை மருத்துவக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையத்தில் புதிதாகச் சேர்ந்த நாட்டுநலப் பணித் திட்டத் தன்னார்வலர்களுக்கான புத்தறிவு நிகழ்ச்சி 21.11.2016 அன்று நடத்தப்பட்டது. கல்லூரி முதல்வர் முனைவர் க. ந. செல்வக்குமார் அவர்கள் நிகழ்ச்சிக்குத் தலைமையேற்று, மாணவர்களுக்குச் சமூகச் சேவையின் முக்கியத்துவத்தினை விளக்கினார்.

### வெற்றி 1968 அறக்கட்டளையின் கல்வி உதவி



வெற்றி 1968 அறக்கட்டளை 2014–15ஆம் சேர்க்கைப் பிரிவைச் சார்ந்த மூன்றாமாண்டு பி.வி.எஸ்சி. மற்றும் ஏ.எச். பட்ட மாணவி செல்வி ஜி. தாரணிக்குக் கல்வி நிதியுதவி வழங்கியது. நிதியுதவிக்கான காசோலையைப் பல்கலைக்கழகத்தின் துணைவேந்தர் முனைவர் சு. திலகர் அவர்கள் 23.11.2016அன்று சென்னைக் கால்நடை மருத்துவக் கல்லூரியில் நடைபெற்ற நிகழ்ச்சியில் வெற்றி அறக்கட்டளையின் உறுப்பினர்கள் டாக்டர் வி. ராமசாமி, டாக்டர் ஏ. கண்ணன் பாபு, டாக்டர் டி. தனசேகர், டாக்டர் ஏ.ஆர். இளங்கோவன், டாக்டர் வி.எஸ். சூரியன், டாக்டர் ஆர். கனகவேல், டாக்டர் ஆனந்த ஜெகன் மோகன் ஆகியோர் முன்னிலையில் மாணவியிடம் வழங்கினார். இந்நிகழ்வில் சென்னைக் கால்நடை மருத்துவக் கல்லூரி முதல்வர் முனைவர் சி. பாலச்சந்திரன், அடிப்படை அறிவியல் புல முதல்வர் முனைவர் கா. குமணன், சிகிச்சையியல் இயக்குநர் முனைவர் இரா. ஜெயபிரகாஷ், தொலைநிலைக் கல்வி இயக்குநர் முனைவர் ச.அ. அசோகன் ஆகியோர் உடனிருந்தனர்.

**Registered with Registrar of Newspapers for India No.TN TAM/2001/5254**
**Posted at Pathrika Channel, Egmore RMS, Chennai - 8.**

**Licensed to post without prepayment No.TN/PMG/(CCR)/WPP-708/15-17**
**Registration No.TN/TBM/32/2015-17**

Posted on 29.12.2016 at Pathrika channel, EGMORE, RMS
Date of publication : 25th and 26th of every month

Printed and Published by
Dr. S.A. Asokan, Ph.D., Director of Distance Education
on behalf of Tamil Nadu Veterinary and Animal Sciences University
and Printed at University Publication Division, Madhavaram Milk Colony,
Mathur Road, Ambathur Taluk, Tiruvallur District, Chennai - 600 051
**Editor : Dr. S.A. Asokan, M.V.Sc., Ph.D., Phone : 044-2432 0411**
**E-mail : dde@tanuvas.org.in**

### முன்னாள் மாணவர் சந்திப்பு




பல்கலைக்கழகத்தின் துணைவேந்தர் முனைவர் சு. திலகர் அவர்கள் 19.11.2016 அன்று நடைபெற்ற 1966ஆம் ஆண்டு பி.வி.எஸ்சி. பட்ட மாணவர்களின் பொன்விழாச் சந்திப்பில் முதன்மை விருந்தினராகக் கலந்து கொண்டு, பொன் விழா நினைவுப் பொருளை வெளியிட்டு முன்னாள் மாணவர்கள் மற்றும் அவர்தம் குடும்பத்தினரிடையே உரையாற்றினார். சந்திப்பில் பல்கலைக்கழகத்தின் முன்னாள் துணைவேந்தர் முனைவர் ப. தங்கராசு, முன்னாள் பதிவாளர் முனைவர் ஆர். குமாரராஜா ஆகியோர் பங்கேற்றனர்.

### காணொலிக் காட்சிவழிப் பல்கலைக்கழகத் தேர்வுக் குழுக் கூட்டம்

தமிழ்நாடு கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக்கழகத்தில் ஒரு புதிய முயற்சியாக, காணொலிக் காட்சிவழி 285ஆவது பல்கலைக்கழகத் தேர்வுக் குழுக் கூட்டம் 18.11.2016அன்று நடைபெற்றது. இந்நிகழ்ச்சிக்குப் பல்கலைக்கழகத்தின் துணைவேந்தர் முனைவர் சு. திலகர் அவர்கள் தலைமை வகித்தார். காணொலிக் காட்சிவழி நாமக்கல், கால்நடை மருத்துவக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலைய முதல்வர் முனைவர் இல. குணசீலன், திருநெல்வேலி கால்நடை மருத்துவக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலைய முதல்வர் முனைவர் எம். திருநாவுக்கரசு, ஒசூர் கோழியின உற்பத்தி மற்றும் மேலாண்மைக் கல்லூரி முதல்வர் முனைவர் கே. மணி ஆகியோர் நிகழ்ச்சியில் பங்கேற்றனர். பல்கலைக்கழகப் பதிவாளர் மற்றும் உறுப்பினர் செயலர் முனைவர் பெரு.



மதியழகன், பல்கலைக்கழகத் தேர்வாணையர் முனைவர் சி. பாலசுப்பிரமணியன், சென்னைக் கால்நடை மருத்துவக் கல்லூரி முதல்வர் முனைவர் சி. பாலசந்திரன், அடிப்படை அறிவியல் புல முதல்வர் முனைவர் கா. குமணன், ஒரத்தநாடு கால்நடை மருத்துவக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலைய முதல்வர் முனைவர் க.ந. செல்வக்குமார், கோடுவெளி உணவு மற்றும் பால்வளத் தொழில்நுட்பக் கல்லூரி முதல்வர் முனைவர் டி. பாஸ்கரன், தொலைநிலைக் கல்வி இயக்குநர் முனைவர் ச.அ. அசோகன் ஆகியோர் உடனிருந்தனர்.

### பணி ஓய்வு



சென்னைக் கால்நடை மருத்துவக் கல்லூரியின் கால்நடை உற்பத்திப் பொருட்கள் தொழில்நுட்பத் துறையின் (பால்வள அறிவியல்) ஆய்வக உதவியாளர் திரு. எம். ஜெகநாதன் அவர்கள் 30.11.2016அன்று பணி ஓய்வு பெற்றார். 19.11.1958இல் பிறந்த இவர், மொத்தம் 33 ஆண்டும் 11 மாதமும் பணியாற்றியுள்ளார்.



காட்டுப்பாக்கம், கால்நடை அறிவியல் முதுகலை ஆராய்ச்சி நிலையத்தின் திறனறி பணியாளர் (சிறப்பு நிலை) திரு. ஆர். சேகர் அவர்கள் 30.11.2016அன்று பணி ஓய்வு பெற்றார். 06.11.1956இல் பிறந்த இவர், மொத்தம் 24 ஆண்டும் 04 மாதமும் பணியாற்றியுள்ளார்.

### பதிப்புக் குழு

**முதன்மை ஆசிரியர்**
முனைவர் சு. திலகர், துணைவேந்தர்
தமிழ்நாடு கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக்கழகம்

**ஆசிரியர்**
முனைவர் ச.அ. அசோகன்
தொலைநிலைக்கல்வி இயக்குநர்

**உறுப்பினர்கள்**
முனைவர் க. குலசேகர்
முனைவர் பா. டென்சிங் ஞானராஜ்
முனைவர் சி. மணிவண்ணன்
மருத்துவர் அ. ஷ்யாம் பாபு
முனைவர் அ. மணிவண்ணன்
முனைவர் பா. மதுகேஸ்வரன்